பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 12 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரின் வீடுகளுக்கான சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ் இதுவரை ஆறு லட்சத்திற்கு மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
2. மகாராஷ்ட்ரா மாநில முதலமைச்சராக திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் இன்று பதவியேற்கிறார்.
3. தமிழகத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மூவாயிரத்து 555 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.
5. ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தானை வென்று கோப்பையை கைப்பற்றியது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமரின் வீடுகளுக்கான சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ் நாடு முழுகூதும் சூரிய தகடுகளை பொருத்துவதன் எண்ணிக்கை அடுத்த மூன்று மாதங்களுக்குள் பத்து லட்சத்தை எட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டம் தொடங்கப்பட்ட ஒன்பது மாதங்களில் நாடு முழுவதும் ஆறு லட்சத்து 30 ஆயிரம் சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

2027-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஒரு கோடி சூரிய மின்சக்தி தகடுகளைப் பொருத்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, கேரளா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பெரும் எண்ணிக்கையில் இது அமைக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதனை அமைப்பதற்கான நடைமுறைகள் எளிமையாக்கப் பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மகாராஷ்ட்ரா மாநில முதலமைச்சராக திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் இன்று பதவியேற்கிறார்.

மும்பையில் இன்று மாலை ஆஷாத் மைதானத்தில் நடைபெறும் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

முன்னதாக நேற்று நடைபெற்ற பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அதன் குழு தலைவராக திரு பட்நாவிஸ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, திரு ஃபட்நாவிஸ், கூட்டணி கட்சித் தலைவர்களுடன் இணைந்து, ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், புதிய அரசு அமைக்குமாறு திரு தேவேந்திர பட்நாவிஸுக்கு அழைப்பு விடுத்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மூவாயிரத்து 555 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் இந்த திட்டத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக நடைபெற்ற உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

மொத்தம் 483 பணிகளை செயல்படுத்த இந்த நிதி ஒதுக்கப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஒவ்வொரு தொகுதியிலும் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத பத்து முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பரிந்துரையின் அடிப்படையில் இந்த பணிகள் நடைபெறவுள்ளன.

[]<<<>>>[]

தமிழகத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டு வருவதாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை அவர் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் உள்ள திருமணிமுத்தாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மதிவேந்தன் ) ---27 செகண்ட்*

இதற்கிடையே நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் புயல் மழையால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம், கடலூருக்கு 56 லட்சம் ரூபாய் மதிப்பிலான வெள்ள நிவாரணப் பொருட்களை அமைச்சர் திரு மதிவேந்தன் நேற்று அனுப்பி வைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், நீலகிரி மாவட்டம். உதகமண்டலத்தில் உள்ள தேவாலாவில் 169 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றுலா அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் மாமல்லபுரத்தில் நந்தவனம் பாரம்பரிய பூங்காவை மேம்படுத்துவதற்காக 99 கோடியே 67 லட்சம் ரூபாயும், நீலகிரி மாவட்டம் தேவாலாவில் பூந்தோட்டம் அமைப்பதற்கு 70 கோடியே 23 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் சுமார் ஐயாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 23 மாநிலங்களில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்காக மூவாயிரத்து 295 கோடி ரூபாயை மத்திய சுற்றுலா அமைச்சகம் ஒதுக்கியுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இளைஞர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் நோக்கில் நேரு யுவகேந்திரா சார்பில் நடத்தப்படும் போட்டிகளில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்று வருவதாக தமிழ்நாடு புதுச்சேரி நேரு யுவகேந்திரா இயக்குநர் திரு செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இப்போட்டியில் பங்கேற்பதற்கு மை-பாரத் இணையதளம் மூலம் பதிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்டைப் - செந்தில்குமார்) -47--- செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை சென்ட்டிரல் - கோயம்புத்தூர் இடையே இயக்கப்படும் இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில் நாளை காட்பாடியிலிருந்து புறப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவிதுள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த ரயில் நாளை காட்பாடி வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் - கே எஸ் ஆர் பெங்களூரு லால்பாக் அதி விரைவு ரயில் நாளை காட்பாடியிலிருந்து புறப்படும்.

மறுமார்க்கத்தில் இந்த ரயில் காட்பாடி வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கையில் அடுத்த நான்கு மாதங்களுக்கான செலவின அறிக்கை இன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

**[]<<<>>>[]**

பூட்டான் மன்னர் **Jigme khesar** இரண்டு நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா – எஸ்டோனியா இடையே வேளாண் துறையில் மேலும் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தேசிய சிறு தொழில் கழகம் கடந்த நிதி ஆண்டுக்கான ஈவுத் தொகையை 37 கோடியே 97 லட்சம் ரூபாயை மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது.

**[]<<<>>>[]**

தொலைத் தொடர்பு சாதனங்களின் இறக்குமதி குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கோவை மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகள் அவர்களது உறவினர்களுடன் காணொலி வாயிலாக பேசுவதற்கான தொலைபேசி வசதியையும், சீரமைக்கப்பட்ட நூலகத்தையும் மாநில அமைச்சர் திரு ரகுபதி நேற்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

விழுப்புரம் பேருந்து நிலையத்தில் மழைநீர் முழுவதும் வெளியேற்றப்பட்டதை அடுத்து வழக்கமான பேருந்து போக்குவரத்து தொடங்கியது.

**[]<<<>>>[]**

பிரதமரின் மீன வளர்ப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ராமநாதபுரம் மாவட்டம் மரைக்காயர் பட்டினம் மன்னார் வளைகுடா பகுதியில் இரண்டு புள்ளி ஒரு மில்லியன் பச்சைவரி இறால் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த பட்டியல் தொடர்பாக வீடு வீடாக சென்று சரிபார்க்கும் பணி நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா கோப்பையை வென்றது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா ஐந்து - மூன்று என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

இந்திய தரப்பில் அரய்ஜித்சிங் ஹூண்டால் நான்கு கோலும், தில்ராஜ் சிங் ஒரு கோலும் அடித்தனர்.

இந்த வெற்றியை அடுத்து, ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் ஐந்தாவது முறையாக இந்தியா கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரேன் இடையேயான எட்டாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.